# *மக்கள் ஆய்வகம்*

*வழங்கும்*

## மாநில அளவிலான கள ஆய்வு முடிவுகள்

### *ஆய்வகப் பின்னணி*

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கையுடன் மக்களை மையப்படுத்திய பல்துறை ஆய்வுகளையும் பரப்புரைகளையும் மேற்கொண்டு வருவது ***மக்கள் ஆய்வகம்***. மக்களின் உள்ளக்கிடக்கையை ஆய்வுப்பூர்வமாக அறிந்து, செயல்பூர்வமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியாக, தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வுக் கலைப்பயணத்தைக் கடந்த மே மாதம் (09 - 22) தமிழக அளவில் நடத்தியது. இந்த "மெகா" பயணத்தின் வழியாக, சுமார் ஒரு லட்சம் பேருக்கு இச் சட்டம் அறிமுகமாகி உள்ளது குறிப்பிடத்தக்கது. ஆய்வுகளை அடியொற்றிய கலைப்படைப்புக்களை உருவாக்கும் மற்றொரு முயற்சியாக, அரவாணிகளைப் பற்றிய "*அப்பால்,*" இளைஞரைப் பற்றிய "*வர்ணா*" ஆகிய குறுந்திரைப் படங்களையும் தயாரித்துள்ளது.

### *ஆய்வு அணுகுமுறை*

திமுக ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டேகால் ஆண்டுகளாகியுள்ள நிலையில், தமிழக அரசியல் களத்தில் நிகழ்ந்துள்ள மாற்றங்களையும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலையும் கவனத்தில் கொண்டு, பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில், செப்டம்பர் மாதம் (15 - 22) களஆய்வு நடைபெற்றது. தமிழகத்தின் 31 நாடாளுமன்றத் தொகுதிகளில் மொத்தம் 2709 பேரிடம் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

நாட்டிலேயே முதல்முறையாகத் தமிழ்வழியில் பயிற்றுவிக்கும் லொயொலா கல்லூரியின் ***ஊடகக் கலைகள் துறை***யைச் சேர்ந்த முதுகலை ஆய்வு மாணவர்களும் மக்கள் ஆய்வகத்தின் சிறப்புப் பயிற்சிபெற்ற தரவுச் சேகரிப்பாளர்களும் களஆய்வில் ஈடுபட்டனர். இந்தியப் பண்பாட்டு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, பேரா. டாக்டர் ச. ராஜநாயகம் உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டுள்ளது.

திரை அரசியல், தள அரசியல், மாநில அரசியல், மைய அரசியல் ஆகிய நான்கு பெருந் தலைப்புகளின் கீழ் ஆய்வு முடிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

### *பங்கேற்றோர் பின்னணி*

களஆய்வில் பங்கேற்றோரில் ஆண்கள் - 54.0, பெண்கள் - 46.0. *வயதுரீதியாக,* 25 வயது வரை - 19.8, வயது 26 முதல் 35 வரை - 31.7, வயது 36 முதல் 45 வரை - 23.1, வயது 46 முதல் 60 வரை - 20.7 (மீதி - வயது 60-க்கு மேல்). பங்கேற்றோரில் 20.4 திருமணமாகாதவர்கள், 15.6 வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் தமது முதல் வாக்கைச் செலுத்தவுள்ளவர்கள்.

*கல்வியைப்* பொருத்த மட்டில், பெரும்பாலோர் (48.3) வகுப்பு 6 முதல் 12 வரை படித்துள்ளவர்கள் (படிக்காதவர்கள் முதல் 5-ஆம் வகுப்பு வரை படித்துள்ளவர்கள் - 28.5, கலைசார் கல்லூரிக் கல்வி - 16.5, தொழில்சார் கல்லூரிக் கல்வி - 6.0, மீதி - பிறவகைப் படிப்புக்கள்). *தொழில்ரீதியாக,* கூலி/விவசாயிகள் - 38.5, சிறிய அளவில் சொந்தத் தொழில் செய்வோர் - 25.0, தனியார் நிறுவனத்தில் வேலை செய்வோர் - 10.1, அரசு ஊழியர் - 4.5, மீதி - வேறு வேலைகள்.

*சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 21.8, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 29.1, பிற்படுத்தப் பட்டோர் - 43.7 (மீதி - பிற இனத்தினர் / சாதி தெரிவிக்காதோர்). *மதரீதியாக,* இந்து மதத்தினர் - 87.5, இஸ்லாமியர் - 6.3, கிறிஸ்தவர் - 6.1.

## *திரை அரசியல்*

### *01. திரை ரசனை:*

தமிழக மக்களில் அறுதிப் பெரும்பான்மையோருக்கு (82.4) ஏதாவதொரு நடிகரைப் பிடித்துள்ளது. எனினும், ரசிகர்மன்ற உறுப்பினராக உள்ளவர்கள் வெறும் 5.1 மட்டுமே.

தமிழ்த் திரையுலகில் தமக்கு மிகவும் பிடித்த (all-time favourite) நடிகர் / நடிகை, அவர்கள் நடித்த படங்களில் மிகவும் பிடித்தது ஆகியவை குறித்த "திறந்த வினா"க்களுக்கு (open-ended questions) அளித்துள்ள பதில்களில் (10 விழுக்காடுக்கு மேல் பெற்று) முதல் ஐந்து இடங்களில் வருபவை:

| பிடித்த நடிகர் | பிடித்த படம் |
|---|---|
| 01. எம்.ஜி.ஆர். (21.3) | நாடோடி மன்னன் |
| **02. சிவாஜி (18.9)** | **பாசமலர்** |
| 03. விஜய் (16.4) | கில்லி |
| **04. ரஜினி (16.2)** | **பாட்ஷா** |
| 05. விஜயகாந்த் (10.7) | கேப்டன் பிரபாகரன் |

| பிடித்த நடிகை | பிடித்த படம் |
|---|---|
| 01. சரோஜாதேவி (20.5) | படகோட்டி |
| **02. ஜெயலலிதா (17.8)** | **அடிமைப் பெண்** |
| 03. கே.ஆர்.விஜயா (13.6) | திரிசூலம் |
| **04. ஜோதிகா (11.3)** | **மொழி** |
| 05. குஷ்பு (10.4) | சின்னத் தம்பி |

### *02. நடிகர்களின் கட்சி அரசியல்:*

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், சமீப காலங்களில் நடிகர்கள் தொடங்கியுள்ள கட்சிகளில் தேமுதிக தவிர்த்த பிறவற்றால் பெரிதாக எந்தத் தாக்கமும் இருக்காது என்பதே பெரும்பான்மைக் கருத்து.

| கட்சி | மிகப்பெரிய தாக்கம் | ஓரிரு இடங்களில் மட்டும் | தாக்கமேதும் இருக்காது |
|---|---|---|---|
| தேமுதிக (விஜயகாந்த்) | 43.4 | 32.8 | 23.8 |
| **அஇசமக (சரத்குமார்)** | **2.5** | **14.8** | **82.7** |
| லதிமுக (விஜய டி. ராஜேந்தர்) | 1.1 | 4.2 | 94.7 |
| **அஇநாமக (கார்த்திக்)** | **0.7** | **3.1** | **96.2** |

### *03. ரஜினிக்கு ஏற்ற துறை:*

ரஜினிகாந்த் இனி செல்லவேண்டிய துறையாக முழுநேர நடிப்பு எனப் பெரும்பாலோர் (45.8) விருப்பம் தெரிவித்தாலும், பேசாமல் அவர் ஓய்வெடுப்பது நல்லது என்ற ஏமாற்றம் தோய்ந்த பதிலையும் கணிசமானோர் (32.5) தெரிவித்துள்ளனர் (குறிப்பிடத்தக்க பிற பதில்கள்: முழுநேர ஆன்மீகம் - 10.7, முழுநேரச் சமூக சேவை - 5.2, நேரடி அரசியல் - 4.3).

## *தள அரசியல்*

### *04. நெடுங்காலமாய்த் தீர்க்கப்படாத தளப் பிரச்சனை:*

தங்கள் ஊரில் / பகுதியில் நெடுங்காலமாய்த் தீர்க்கப்படாமலே உள்ள முக்கியத் தேவை / பிரச்சனையாக மக்கள் சுட்டிக்காட்டுபவற்றில் முதல் ஐந்து:

குடிதண்ணீர் வசதி இல்லை - 39.7
சாலை/பஸ் வசதி இல்லை - 22.9
கழிப்பிட வசதி இல்லை - 17.3
மருத்துவ/சுகாதார வசதி இல்லை - 7.6
ரேஷன் விநியோகம் சரியில்லை - 5.2

### *05. உடனடியாய்த் தீர்க்கவேண்டிய தளப் பிரச்சனை:*

தங்கள் ஊரில் / பகுதியில் உடனடியாய்த் தீர்க்கப்பட வேண்டிய அவசரத் தேவை / பிரச்சனையாக மிகப் பெரும்பான்மையான மக்கள் மின்வெட்டைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

**மின்வெட்டு - 85.2**
ரேஷன் விநியோகம் சரியில்லை - 5.1
அரசு அலுவலங்களில் லஞ்சம் - 3.8
கழிப்பிட வசதி இல்லை - 2.5
குடிகாரர் பிரச்சனை - 2.7

### *06. மக்கள் பிரதிநிதிகளின் செயல்பாடு:*

தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் செயல்பாடுகளைக் குறித்துப் பரவலான ஏமாற்றமே நிலவுகிறது. எனினும், நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்களை விட, உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பு வகிப்போருக்கு அதிகப் பாராட்டுக் கிடைக்கிறது.

| | *நன்று* | *சிறப்பாக ஏதுமில்லை* | *மோசம்* |
|---|---|---|---|
| நாடாளுமன்ற உறுப்பினர் | 30.8 | 30.3 | 38.9 |
| சட்டமன்ற உறுப்பினர் | 35.1 | 28.9 | 36.0 |
| நகராட்சி/பஞ்சாயத்துத் தலைவர் | 43.4 | 24.1 | 32.5 |
| வார்டு உறுப்பினர் | 48.3 | 22.8 | 28.9 |

### *07. எம்.பி. நிதியின் பயன்பாடு:*

எம்.பி.க்களுக்கு வழங்கப்படும் தொகுதி மேம்பாட்டு நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விதம் குறித்து மிக அதிக அளவில் (83.1) அதிருப்தி நிலவுகிறது. வெறும் 16.9 மட்டுமே அந்த நிதி முழுமையாகத் தொகுதிக்கே செலவழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அந்த நிதியிலிருந்து தங்கள் எம்.பி. இதுவரை எதுவும் செய்யவில்லை (53.7), அவருக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் செய்துள்ளார் (16.8), கொஞ்சம் தொகுதிக்கும் அதிகமான அளவு விளம்பரத்திற்கும் செலவழித்துள்ளார் (9.9) என்பவை பரவலான கருத்துக்கள்.

### *08. மீண்டும் தேர்தலில் நின்றால்...?*

வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தற்போதைய தமது எம்.பி. போட்டியிட்டால் அவருக்கு வாக்களிக்கப் போவதில்லை என்பதே பெரும்பான்மைக் கருத்து (வாக்களிப்பேன் - 38.9, வாக்களிக்க மாட்டேன் - 61.1).

வாக்களிக்க மறுப்பதற்கான காரணங்களில், தொகுதியின் தேவைகள் எதையும் அவர் நிறைவேற்ற வில்லை (32.6), தொகுதிக்கு அடிக்கடி வந்து மக்களைச் சந்திக்கவில்லை (26.0), எம்.பி. நிதியை முறையாகப் பயன்படுத்தவில்லை (11.2) ஆகியவை முக்கியமானவை.

### *09. தொகுதிப் பிரதிநிதிகளாக மத்திய அமைச்சர்கள்:*

தமிழகத்திலிருந்து லோக்சபை எம்.பி.க்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அமைச்சர்களாக இருக்கும் பதினோரு பேரும் மீண்டும் தத்தமது தொகுதியில் போட்டியிட்டால் அதிகமான எதிர்ப்பையே சந்திக்க வேண்டியிருக்கும்.

| | *ஆதரவு* | | *ஆதரவு* |
|---|---|---|---|
| சிதம்பரம் | 20.3 | வேலு | 44.7 |
| ரகுபதி | 21.1 | இளங்கோவன் | 45.5 |
| ராதிகா செல்வி | 34.0 | சுப்புலட்சுமி ஜெ. | 47.1 |
| மணிசங்கர் | 35.1 | பழனிமாணிக்கம் | 48.2 |
| ராசா | 36.7 | டி.ஆர். பாலு | 48.9 |
| வேங்கடபதி | 42.1 | | |

### *10. அரசு அலுவலகங்களின் செயல்பாடு:*

திமுக ஆட்சியில் அரசு அலுவலகங்கள்/அதிகாரிகளின் செயல்பாடுகள் குறித்து வெவ்வேறு விதங்களில் கடுமையான (87.3) அதிருப்தி வெளிப்படுகிறது . பெரும்பாலும் மிக நேர்மையாக, கடமை உணர்வோடு செயல்படுவதாகத் தெரிவிப்போர் 12.7 மட்டுமே.

### *11. நூறு நாள் வேலை உறுதித் திட்டம்:*

கிராமப்புற நூறு நாள் வேலை உறுதித் திட்டம் தங்கள் பகுதியில் சிறப்பாக நடைபெறுவதாகக் கணிசமானோர் (29.9) தெரிவித்தாலும், இத் திட்டம் குறித்துப் பரவலான விமர்சனங்களும் முன்வைக்கப் படுகின்றன: அனுமதிக்கப்பட்ட வசதிகளைச் செய்து தராமல் ஏமாற்றுகிறார்கள் (15.1), சரிவர வேலை தராமல் பொய்க்கணக்கு எழுதிவிடுகிறார்கள் (12.5), மத்திய அரசு நிர்ணயித்த கூலியைத் தராமல் அதிகாரிகள் ஊழல் செய்கிறார்கள் (12.4), ஆளும் கட்சியினரின் குறுக்கீடு இதில் அதிகமாக உள்ளது (3.8) ஆகியவை முக்கிய விமர்சனங்கள் (மீதி - இத் திட்டம் பற்றி எதுவும் தெரியாது / எங்கள் பகுதியில் இல்லை).

## *மாநில அரசியல்*

### *12. திமுக அரசின் சலுகைகள்/நலத் திட்டங்கள்:*

ஆட்சிக்கு வந்தது முதல் திமுக அரசு அறிவித்து வரும் பல்வேறு விதமான சலுகைகள் / நலத்திட்டங்களுக்கு மக்கள் மத்தியில் பரவலான வரவேற்பு உள்ளது (73.9). எனினும், இச் சலுகைகள் இலக்கு மக்களைச் சரியாகச் சென்றடைவதில்லை என்ற கருத்தும் ஏறத்தாழ அதே வலுவோடு (72.5) முன்வைக்கப் படுகிறது.

அரசு அதிகாரிகளிடையே மலிந்துவிட்ட லஞ்ச ஊழல் (45.2), ஆளும் கட்சியினரின் அரசியல் குறுக்கீடுகள் (36.7), சலுகைகள் இருப்பதைக் குறித்துத் தெரியாமல் இருப்பது (14.8) ஆகியவை முக்கியத் தடைக்கற்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

### *13. அரசு கேபிள் டி.வி. நிறுவனம்:*

அரசு தொடங்கியுள்ள கேபிள் டி.வி. நிறுவனம் மிகவும் காலம்கடந்து நடைமுறைப் படுத்தப்படும் திட்டம் எனப் பெரும்பாலோர் (39.2) கருதுகின்றனர். ஏற்கெனவே உள்ள கேபிள் நிறுவனங்களை நெறிப்படுத்துவதே அரசின் வேலையே தவிர, தானே வர்த்தகத்தில் இறங்குவதல்ல (31.4), இதில் தேவையற்ற சுணக்கமும் அரசியல் குறுக்கீடும் உள்ளன (13.5), தொழில்நுட்பரீதியாகக் காலாவதியாகிவரும் கேபிள் தொழிலில் அரசு ஈடுபடுவது வீண்வேலை (8.9), இது சன் குழுமத்தைப் பழிவாங்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி, இதில் பொதுநலம் ஏதுமில்லை (5.8) ஆகியவை பிற முக்கியக் கருத்துக்கள்.

### 14. *மின்தட்டுப்பாடுக்குக் காரணம்:*

தமிழகத்தில் பரவலாக உள்ள மின்வெட்டுக்கு முதன்மைக் காரணமாக, மின் விநியோகம் மற்றும் மின் உற்பத்தியைத் திமுக அரசு தொலைநோக்குடன் திட்டமிடாதது சுட்டிக் காட்டப்படுகிறது (55.5). இது தேசிய அளவிலான பிரச்சனை என்பதால், எதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது (23.7), கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகவே அதிமுக / திமுக அரசுகள் மின் உற்பத்தியில் மெத்தனமாக இருந்ததன் விளைவு (6.8), பருவநிலை மாற்றங்களால் மின் உற்பத்தி குறைந்து விட்டது (6.3) ஆகியவை பிற காரணங்கள்.

### *15. விலைவாசி உயர்வுக்கு யார் பொறுப்பு?*

விலைவாசி உயர்வைத் தடுக்கத் திமுக அரசு தவறிவிட்டதாகப் பெரும்பாலோர் (56.1) கருதுகின்றனர். விலைவாசியைக் கட்டுப்படுத்துவது மாநில அரசின் கையில் இல்லை (20.5), உலகம் முழுவதுமே விலைவாசி ஏறியுள்ளது (11.4), தற்போது அப்படியொன்றும் விலைவாசி ஏறிவிடவில்லை (6.2) ஆகியவை பிற முக்கியப் பதில்கள்.

### *16. முழுமையான மதுவிலக்கு?*

மது அருந்துவோர் எண்ணிக்கை பெருகிவரும் சூழ்நிலையில், முழுமையான மதுவிலக்கை அரசு நினைத்தால் நிச்சயம் அமுல்படுத்த முடியும் என்ற கருத்து வலுவாக (36.0) முன்வைக்கப் படுகிறது. ஏறத்தாழ அதற்கு இணையாக (34.1), குடிப்பவர்கள் திருந்தாமல் சட்டத்தால் மட்டும் முடியாது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. மாறிவரும் இன்றையப் பண்பாட்டுச் சூழலில், குடிப்பதைக் கட்டுப்படுத்தலாமே தவிர, முற்றிலும் ஒழிக்க முடியாது (10.3), கள்ளச் சாராயம் பெருகிவிடும் (5.9), அரசுக்குப் பெருத்த வருவாய் இழப்பு ஏற்படும் (4.4), குடிப்பதில் தவறில்லை, எனவே மதுவிலக்குத் தேவையில்லை (3.5) ஆகியவை பிற பதிவுகள்.

### *17. ரேஷன் அரிசி விலைக் குறைப்பு:*

ரேஷன் அரிசி விலையை கிலோ ஒரு ரூபாயாகக் குறைத்ததால், பெரிதாக நன்மை எதுவும் விளைந்து விடவில்லை என்ற எண்ணம் பரவலாக உள்ளது. ஏழை மக்களுக்கு மிகவும் உதவியான திட்டம் எனக் கணிசமானோர் (21.8) கருதினாலும், பிற பொருட்களின் விலையைக் குறைக்காமல் இதனால் ஒரு பயனுமில்லை என்பதே பெரும்பான்மைக் கருத்து (52.7). முக்கியப் பிரச்சனைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்பும் முயற்சி இது (8.6), கடத்தல் முதலிய ஊழல்கள் அதிகமாகத்தான் இது உதவும் (6.6), ஏழைகளுக்குப் பெரிதாக எதுவும் மிச்சமாகாது (5.6) ஆகியவை பிற கருத்துக்கள்.

### *18. கட்சிகளின் தற்போதைய செயல்பாடு:*

தமிழக அரசியல் களத்தில் சமீப காலங்களில் நடந்துவரும் மாற்றங்களின் பின்னணியில், கட்சிகளின் தற்போதைய செயல்பாடுகள் குறித்த மக்களின் ஒட்டுமொத்த மதிப்பீடு:

| கட்சி | நன்று | குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவுமில்லை | மோசம் |
|---|---|---|---|
| ஆட்சியில் திமுக | 36.1 | 26.5 | 37.4 |
| தமிழக காங்கிரஸ் | 25.3 | 33.1 | 41.6 |
| விடுதலைச் சிறுத்தைகள் | 5.2 | 41.9 | 52.9 |
| எதிர்க்கட்சியாய் அதிமுக | 40.5 | 41.0 | 18.5 |
| மதிமுக | 25.5 | 44.9 | 29.6 |
| பாமக | 29.8 | 39.5 | 30.7 |
| இடதுசாரிகள் | 23.1 | 42.7 | 34.2 |
| தேமுதிக | 39.1 | 32.7 | 28.2 |
| பாஜக | 10.3 | 39.6 | 50.1 |

அதிமுக, தேமுதிக ஆகிய இரு கட்சிகளைத் தவிர பிற அனைத்திற்கும் ஆதரவை விட எதிர்ப்பு அதிகமாக இருப்பது இங்கு கவனிக்கத் தக்கது. கடந்த 2007 டிசம்பர் கணிப்போடு ஒப்பிடுகையில், திமுக பலத்த சரிவைச் சந்தித்துள்ளது புலப்படும்.

### *19. தமிழகச் சூழலில் வாக்கு யாருக்கு?*

திமுக அரசின் இரண்டேகால் ஆண்டு ஆட்சியின் பின்னணியில், இன்று வாக்களிப்பதாக இருந்தால், மக்களுடைய வாக்குகள் பிரியும் விதம்:

| திமுக | அதிமுக | தேமுதிக |
|---|---|---|
| 25.8 | 38.3 | 19.5 |

(பிற கட்சிகளில்: காங்கிரஸ் - 3.4, பாமக - 2.8, பாஜக - 1.7, இடதுசாரிகள் - 1.3, மதிமுக - 1.2, இப்போது சொல்ல இயலாது - 4.3, மீதி - ஏனைய கட்சிகள்).

கடந்த 2006 டிசம்பர் மற்றும் 2007 மே மாதக் கணிப்புகளோடு ஒப்பிடுகையில், அதிமுக தொடர் வளர்ச்சியையும் (2006 டிச. - 23.9, 2007 மே - 27.6), திமுக தொடர் சரிவையும் (2006 டிச. - 39.7, 2007 மே - 31.8) சந்தித்துள்ளன. தேமுதிக சற்றுச் சரிந்து மீண்டுள்ளது (2006 டிச. - 21.4, 2007 மே - 15.2).

### *20. தனிமனித ஒழுக்கத்தை விமர்சிக்கும் அரசியல்வாதிகள்:*

அரசியல்வாதிகள் ஒருவர் ஒருவருடைய தனிமனித ஒழுக்கத்தை அவ்வப்போது விமர்சிக்கும் தமிழக அரசியல் நிலவரம் குறித்து மக்கள் தெரிவித்துள்ள கருத்துக்களில், ஒழுக்கத்தைப் பற்றிப் பேசும் யோக்யதை யாருக்குமில்லை (36.2), அரசியல் செயல்பாடுகளை விமர்சிப்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும் (34.0), இப்படி விமர்சித்துக்கொள்வது நல்லதுதான், இதனால் இவர்களுடைய சுயரூபம் மக்களுக்குத் தெரியவரும் (22.9) ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன.

## *மைய அரசியல்*

### *21. மத்திய அமைச்சர்களாகத் தமிழக எம்.பி.க்கள்:*

இந்திய அரசின் அமைச்சர்கள் என்ற அளவில், தமிழகத்தைச் சேர்ந்த பதிமூன்று மத்திய அமைச்சர்கள் செயல்பட்டுள்ள விதம் குறித்துத் தமிழக மக்களின் கணிப்பு:

| அமைச்சர் | நன்று | குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவுமில்லை | மோசம் |
|---|---|---|---|
| அன்புமணி | 39.4 | 20.9 | 39.7 |
| சிதம்பரம் | 35.6 | 10.4 | 54.0 |
| வேலு | 28.3 | 28.5 | 43.2 |
| டி.ஆர். பாலு | 26.5 | 18.7 | 54.8 |
| ராசா | 21.1 | 26.7 | 52.2 |
| வாசன் | 12.2 | 28.8 | 59.0 |
| இளங்கோவன் | 10.2 | 30.2 | 59.6 |
| மணிசங்கர் | 9.3 | 27.0 | 63.7 |
| சுப்புலட்சுமி ஜெ. | 7.1 | 43.4 | 49.5 |
| ராதிகா செல்வி | 5.9 | 43.2 | 50.9 |
| பழனிமாணிக்கம் | 4.8 | 44.3 | 50.9 |
| எஸ். ரகுபதி | 4.3 | 44.6 | 51.1 |
| வேங்கடபதி | 3.8 | 45.6 | 50.6 |

மேல் அட்டவணையோடு தொகுதி அளவில் இவர்களுக்குள்ள ஆதரவு குறித்த முந்தைய அட்டவணையை ஒப்பிட்டால், தேசிய அளவில் அமைச்சராகவும் தொகுதி அளவில் அத் தொகுதியின் பிரதிநிதியாகவும் செயல்படுவதை மக்கள் வெவ்வேறு கோணங்களில் கணித்துள்ளது புலப்படும்.

### *22. முன்கூட்டியே தேர்தல்?*

நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே தேர்தல் வராது என்பது பெரும்பாலோரின் (47.5) அனுமானமாக இருந்தாலும், அதற்கான வாய்ப்பு இருப்பதாகக் குறிப்பிடத்தக்க அளவினர் (30.2) கருதுகின்றனர். இப்போதைய சூழலில் எதையும் நிச்சயமாகச் சொல்ல இயலாது (16.2) என்பது மற்றொரு முக்கிய கருத்து.

### *23. தேசிய அளவில் மூன்றாவது அணி?*

தேசிய அளவில் வலுவான மூன்றாவது அணி அமைவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு எனக் கணிசமானோர் (39.2) கருதுகின்றனர். இப்போதைக்கு எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியாது (19.6), மூன்றாவது அணி அமைவதற்கான வாய்ப்புகள் அதிகம் (18.9), அப்படி அமைந்தாலும் அவ்வணியால் ஆட்சியைப் பிடிக்க முடியாது (13.1) ஆகியவை பிற பதில்கள்.

***24. தேர்தலில் முக்கியப் பிரச்சனை:***

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முக்கியப் பிரச்சனையாக இடம்பெறப் போவது ***விலைவாசி உயர்வு*** என்பது தமிழக வாக்காளரின் ஏகோபித்த கருத்தாக (81.3) வெளிப்படுகிறது. முதல் ஐந்து இடங்களில் வரும் பிற பிரச்சனைகள்: மின்வெட்டு - 5.4, தீவிரவாதத் தாக்குதல்கள் - 4.2, டீசல், எரிவாயுத் தட்டுப்பாடு - 2.8, அணுசக்தி உடன்பாடு - 2.3.

***25. வாக்கும் யூகமும்:***

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணிகள் தமிழக அரசியல் களத்தில் இன்னும் இறுதிசெய்யப்படாத, காங்கிரஸ், திமுக மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் அடங்கிய அணி மட்டுமே உறுதியானதாகத் தோன்றும் தற்போதைய நிலையில், இப்போது தேர்தல் வந்தால், தமிழக வாக்காளரைப் பொருத்தவரை காங்கிரஸ் தலைமையிலான அணிக்கு, பாஜக தலைமையிலான அணியை விட அதிக ஆதரவு வெளிப்படுகிறது. எனினும், அடுத்த ஆட்சி யார் தலைமையில் அமையக் கூடும் என்று யூகிக்கையில், இந்த இரு அணிகளுக்கும் இடையிலான வேறுபாடு சிறுத்து விடுகிறது.

| | **வாக்களிக்க முடிவு** | **ஆட்சி குறித்த யூகம்** |
|---|---|---|
| காங்கிரஸ் தலைமையிலான அணி | 44.3 | 45.1 |
| **பாஜக தலைமையிலான அணி** | **30.8** | **39.2** |
| இடதுசாரிகள் பங்கேற்கும் மூன்றாவது அணி | 3.5 | 3.9 |
| **இப்போதைக்கு நிச்சயமாகச் சொல்ல முடியாது** | **17.5** | **7.9** |

*(மீதி - பதில் சொல்லாதவர்கள்)*

தேசிய அளவில் காங்கிரஸுக்கு மாற்றாகத் தன்னை முன்னிறுத்தும் பாஜக தமிழகத்தில் சேர்க்கப் போகும் அணியின் வலு, மாநில அளவில் ஆட்சியிலுள்ள திமுக-வுக்குச் சரிந்தும் அதிமுக மற்றும் தேமுதிக-வுக்கு வளர்ந்தும் வரும் ஆதரவு, தேர்தல் களத்தில் முக்கியத்துவம் பெறவுள்ள விலைவாசி உயர்வு போன்ற அத்யாவசியப் பிரச்சனைகள், தற்போதைய எம்.பி.கள் மீது தொகுதி அளவிலுள்ள கசப்புணர்வு முதலான பல காரணிகளின் கூட்டுச் செயல்பாட்டை ஆராயும்போது, பாஜக அணிக்கு ஆதரவான களச் சூழல் தமிழகத்தில் நிலவுகிறது எனக் கணிக்க முடியும்.

***26. அடுத்த பிரதமர்:***

அடுத்த பிரதமராகும் வாய்ப்புள்ளவர்களாக மக்கள் கருதும் *முதல் ஐவர்:* மன்மோகன் சிங் (40.28), அத்வானி (38.53), சோனியா காந்தி (34.88), ராகுல் காந்தி (28.12), லாலு பிரசாத் யாதவ் (11.82).

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர்
25.09.2008

***குறிப்புகள்:*** (01) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (02) மறுசீரமைக்கப்பட்ட புதிய தொகுதிகளை இந்த ஆய்வுக்கு அடிப்படையாகக் கொள்ளவில்லை. (03) பெரும்பாலான கேள்விகளுக்கு மக்களின் முக்கியமான கருத்துக்கள் மட்டுமே இந்த ஆய்வறிக்கையில் இடம்பெற்றிருப்பதால், சதவீதத்தின் கூட்டுத்தொகை 100-ஆக இருக்காது.

மக்கள் ஆய்வகம் &
முதுகலை ஊடகக் கலைகள் துறை (தமிழ்வழி)
லொயோலா கல்லூரி, சென்னை 600 034